JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 253/2025 | Crime No. | 112/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **PW3– நிகேஷ்குமார்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நெருஞ்சிப்பேட்டையில் குடியிருந்து கொண்டு, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கிறா. அ.சா. ஸ்ரீதர் எனது அண்ணன் ஆவார். அ.சா. 2 பூங்கொடி எனது அம்மா ஆவார். கடந்த 30.04.2025–ம் தேதியன்று எனது அண்ணனின் நண்பர் இறந்து விட்டார். அந்த இறப்பிற்காக நானும், எனது அண்ணனும் மயானத்திற்கு சென்றிருந்தோம். அங்கு இறந்துபோன அவரது நண்பரின் உடல் மீது எனது அண்ணன் எருவாமட்டையை வைத்து டீசல் ஊற்றிக் கொண்டிருந்தார். அப்போது மதுபோதையில் அங்கு வந்த ஆஜர் எதிரி எனது அண்ணனை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி நீ எல்லாம் எதற்கு இந்த வேலை செய்கிறாய் என்று கேட்டார். எதிரி, என்னது அண்ணனை தகாத வார்த்தைகளால் பேசியதால் மயானத்திலேயே இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. பின்னர் நான் எனது அண்ணனை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். எதிரியும் எங்களுக்கு பின்னாலேயே எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்போது எனது அண்ணன் வெளியில் குளித்துக் கொண்டிருந்தார். வெளியில் கிடந்த ஜல்லிக்கற்களை எடுத்து எனது அண்ணனின் மீது வீசி தகாத வார்த்தைகளால் எதிரி பேசினார். அப்போது எனது அம்மா சென்று எதிரியிடம் கேட்டபோது எனது அம்மாவையும் எதிரி தகாத வார்த்தைகளால் திட்டினார். எதிரி தனது இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து எனது அண்ணனின் இடப்புற இடுப்பில் குத்திவிட்டார். பின்னர் நான் எதிரியிடமிருந்து எனது அண்ணனை தடுத்து அம்மாபேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது அண்ணனை அழைத்து வந்தேன். பின்னர் அங்கிருந்து பவானி அரசு மருத்துவமனைக்கும், பின்னர்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.28 06:46:46 +0530

மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கும் எனது அண்ணனை அழைத்துச் சென்றேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதியைத்தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால், சரிதான். நானும், எதிரியும் உறவினர்கள் என்றால், சரிதான். தீனா மற்றும் உத்திரபதி எனது உறவினர்கள் என்றால், சரிதான். எனது அண்ணனுக்கும், எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வருகிறது என்றால், ஏற்கனவே ஒரு வழக்கில் எனது அம்மா சாட்சியாக இல்லாததால் முன்விரோதம் இருந்து வந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி முறை தவறி திருமணம் செய்து கொண்டதால் எதிரிக்கும், எனது அண்ணனுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால், சரியல்ல. எதிரி மீது வேறு எந்த வழக்கும் இல்லை என்றால், சரியல்ல.

மகேந்திரன் இறந்தபோது மயானத்தில் நானும், எதிரியும் எனது அண்ணனும் கலந்து கொண்டோம் என்றால், சரிதான். நாங்கள் மூவரும் மது அருந்துவிட்டு அங்கு இருந்தோம் என்றால், சரியல்ல. எனது அண்ணன் தான் எதிரியை மகேந்திரனுக்கு சடங்குகள் செய்ய தகுதி இல்லை என்று கூறி பிரச்சினை செய்தார் என்றால். சரியல்ல. சத்தம் கேட்டு தான் சண்டை போட்டது எனக்கு தெரியும் என்றால். சரிதான்/ நான் முதல் விசாரணையில் சொல்வது போல். சொன்ன நேரத்தில். சொன்ன விதத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும். இந்த வழக்கின் புகார்தாரர் எனது அண்ணன் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நானும் எனது அண்ணனும் சேர்ந்து எதிரியை அடித்தோம் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:47:04 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 253/2025 | Crime No. | 112/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW2–பூங்கொடி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நெருஞ்சிப்பேட்டையில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர்தான் என் மகனை குத்த வந்தார், அ.சா.1 எனது மகன் ஆவார். கடந்த 30.04.2025 தேதியன்று எனது மகன் அவரது பள்ளி தோழர் இறந்த இறப்பிற்கு சென்றிருந்தார். அங்கு எதிரி வீரமணிகண்டன் எனது மகனை அடித்து விட்டதாக கூறி அவர் எனது மகன் வீட்டிற்கு வந்தார். அப்போது நான் எனது மகனிடம் பிரச்சனை வேண்டாம் எதுவாக இருந்தாலும் காலையில் பார்த்துக் கொள்ளலாம் வா என்று வீட்டிற்குள் அழைத்தேன். அப்போது எங்கிருந்து வந்தார் என்று தெரியவில்லை எதிரி அங்கு வந்தார். அப்போது எதிரி அங்கு கிடந்த ஜல்லிக்கற்களால் எனது மகனை அடித்தார். நானும் மற்றொரு மகனும் அதை தடுக்க சென்றோம். அப்போது எங்கிருந்து எதிரி மறைத்து வைத்திருந்தார் என்று தெரியவில்லை கத்தியை எடுத்து எனது மகனின் இடப்புற இடுப்பில் குத்திவிட்டார். நான் அப்போது எதிரியிடம் ஏன் இப்படி வந்து ஆளில்லாத வீட்டில் ஆம்பிளை இல்லாத வீட்டில் வந்து செய்கிறாய் என்று கேட்டதற்கு எதிரே என்னை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அப்படித்தான் குத்துவேன் உன்னால் ஒரு மயிரும் புடுங்க முடியாது என்று கூறி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி விட்டு அங்கிருந்து சென்று விட்டார். பின்னர் எனது மகனை இளைய மகன் மகேஷ் குமார் மற்றொரு பையனுடன் சேர்ந்து அம்மாபேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு முதல் உதவி செய்துவிட்டு மேல் சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். பின்னர் மீண்டும் பவானி அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு எனது மகனை அனுப்பி வைத்தார்கள். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.28 06:47:12 +0530

**எதிரி தரப்பில்குறுக்கு விசாரணை**

நானும், எதிரியும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால், சரிதான். நானும், எதிரியும் உறவினர்கள் என்றால், சரிதான். எதிரியின் வீடும் எனது வீட்டிற்கு அருகில் தான் உள்ளது என்றால், எங்களது வீட்டிலிருந்து இரண்டாவது வீதியில் உள்ளது. எனது மகனுக்கும், எதிரிக்கும் என்ன முன்விரோதம் இருந்து வந்தது என்றால் ,எதிரி ஏற்கனவே ஒரு நபரை அடித்தது தொடர்பாக அந்த வழக்கில் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டார்கள். நாங்கள் மறுத்ததால் எங்களுக்கும், எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வந்தது. எதிரி முறையில்லாமல் திருமணம் செய்து கொண்டார் என்றால், சரிதான். எதிரி முறை இல்லாமல் திருமணம் செய்து கொண்டதால் எனது மகனுக்கும், எதிரிக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்படும் என்றால், வாய் தகராறு மட்டும் ஆகும்.

இறந்த சமயத்தில் மயானத்திற்கு எதிரியும் சென்றார் என்கிற விவரம் எனக்கு தெரியும் என்றால். சரிதான். அப்போது எதிரியும். எனது மகனும் மது அருந்திவிட்டு பிரச்சனை செய்து கொண்டார்கள் என்றால். சரிதான். எதிரியும். எனது மகனும் மயானத்தில் மது அருந்திவிட்டு சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும். அப்போது அங்கிருந்து எனது மகன் ஓடி சென்று கீழே விழுந்து விட்டார் என்றால், சரியல்ல. மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு எனது மகன் சொல்லித்தான் தெரியும் என்றால். சரிதான். நான் தற்போது சொல்லியுள்ள விவரத்தை தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:47:18 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 253/2025 | Crime No. | 112/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW1–ஸ்ரீதர்** | Village | |
| Father’s Name/Husband’s Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நெருஞ்சிப்பேட்டையில் குடியிருந்து கொண்டு. கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர். கடந்த 30.04.2025–ம் தேதியன்று எனது நண்பரின் இறப்புக்கு சென்று விட்டு அவரது உடலுடன் மயானத்திற்கு சென்று அங்கு உடல் மீது எறுவாமட்டை அடுக்கிக் கொண்டிருந்தார்கள். நான் அதற்கு டீசல் ஊற்றிக் கொண்டிருந்தே. அப்போ அப்போது அங்கு மது போதையில் வந்த ஆஜர் எதிரி என்னிடம் நீ எல்லாம் எதற்கு இந்த வேலை செய்கிறாய் என்று கூறி என்னை தகாத வார்த்தைகளால் திட்டினா. அதில் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் எனக்கு மண்டை உடைந்து விட்டது. அப்போது அங்கு வந்த எனது தம்பி என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார். எனக்குப் பின்பு வேறொரு பைக்கில் எனது வீட்டிற்கு வந்த ஆஜர் எதிரிஅ ங்கிருந்த ஜல்லிக்கற்களால் என்னை எடுத்து அடித்தார். அதை பார்த்து எனது அம்மா எதுவாக இருந்தாலும் காலையில் பேசிக்கொள்ளலாம் நீ இப்போது இங்கு இருந்து சென்று விடு என்று கூறினார். அதற்கு ஆஜர் எதிரி எனது அம்மா விதவை என்பதால் அவரை தகாத வார்த்தைகளால் திட்டினார். அங்கிருந்தவர்கள் என்னை குறுக்காட்டினார்கள். அப்போது ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியால் எனது இடதுபுறம் குத்திவிட்டார். அந்த கத்தியை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். நீதிமன்றத்தில் தற்போதுள்ள கத்தியால் தான் எதிரி என்னை குத்தினார். அந்த கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது அம்மா எதிரியிடம் இப்படி வீடேறி வந்து கத்தியால் குத்துகிறாயே என்று கேட்டதற்கு எதிரி என்னைக்கு இருந்தாலும் அவனுக்கு என் கையால்தான் சாவு தற்போது நான் குத்தியது இடுப்பில் தான் என்று

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.28 06:47:26 +0530

கூறிவிட்டு எனக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டார். எதிரி அங்கிருந்து செல்லும்பொழுது மீண்டும் எனது அம்மாவை தகாத வார்த்தைகளால் திட்டி சென்றார். பின்னர் எனது தம்பி என்னை பைக் மூலம் அம்மாபேட்டை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை முடித்துவிட்டு பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அங்கிருந்து மீண்டும் மேல் சிகிச்சைக்காக என்னை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பினார்கள். ஈரோடு அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையிலுள்ளபோது அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் அளித்ததுதான். பு**கார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிற.** எதிரி என்னை அடித்தால் ஜல்லிக்கற்களை எனக்கு அடையாளம் தெரியும். **தற்போது நீதிமன்றத்தில் உள்ள கல்லால் தான் என்னை அடித்தார். அந்த ஜல்லிக்கல் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும். எதிரியும் உறவினர்கள் என்றால். சரிதான். எதிரிக்கும், எனது வீட்டின் அருகே வீடு உள்ளது என்றால், பக்கத்து தெருவில் உள்ளது. எனக்கும், எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வந்துள்ளது என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால், சரிதான். சுமார் 7:00 மணியளவில் மயானத்தில் நடந்தது. மீண்டும் 08.00 மணியளவில் எனது வீட்டில் நடந்தது. எனக்கும், எதிரிக்கும் என்ன முன்விரோதம் இருந்து வந்தது என்றால், எதிரி வேறொரு நபரை அடித்த வழக்கிற்கு என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டார். நான் மறுத்ததால் எனக்கும் அவருக்கும் பிரச்சனை இருந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், ஆஜர் எதிரி உறவுமுறை மாற்றி கல்யாணம் செய்ததால் எதிரி ஊருக்குள் வரக்கூடாது என்று நான் அவரிடம் பிரச்சனை செய்து வந்தேன் என்பதில் தான் எனக்கும், அவருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால், சரியல்ல.

நண்பர் மகேந்திரன் இறந்தபோது தான் மயானத்தில் நானும், எதிரியும் சடங்குகள் செய்து கொண்டிருந்தோம் என்றால், சரிதான். அப்போது இவ்வாறு சடங்கு செய்வதற்கு எதிரிக்கு தகுதி இல்லை என்று நான் தான் எதிரியிடம் பிரச்சினை செய்து அவரை நானும், எனது தம்பியும் ஆஜர் எதிரியை அடித்து விட்டு திரும்ப ஓடிவரும்போது கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது குறுகிய வீதி என்றால், சரிதான். குறுகிய வீதியில் இருட்டாக தான் இருக்கும் என்றால், சரிதான். எதிரி அடித்ததாக சொல்லப்படும் கல்லானது எனது வீட்டில் தான் கொட்டி வைக்கப்பட்டிருந்தது என்றால், சரிதான். சம்பவமானது எனது வீட்டில் தான் நடைபெற்றது என்றால், சரிதான். எங்களை சண்டையிலிருந்து விலக்காட்டி விட்டவர்கள் அனைவரும் எனது உறவினர்கள் தான் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.28 06:47:32 +0530

சங்கதிகளைத்தான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். போலீசார் விசாரணையின்போதும் நான் மேற்படி விவரங்களைத் தான் கூறினேன் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றும் நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:47:38 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.